இயேசுவை தினம் பார்க்கிறேன்

VOL 22 ISSUE 04 APRIL -2022 ஆண்டு சந்தா 100/- தனிப்பிரிதி 10/-

# என் மீட்பர் உயிரோடிருக்கிறார்



WWW.JESUSLIVES.IN

# ஆசிரியர் உரை

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த மாத இதழ் மூலமாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன். ஆண்டவராகிய கர்த்தர் என் பெலன், அவர் என் கால்களை மான்கால்களைப் போலாக்கி, உயரமான ஸ்தலங்களில் என்னை நடக்கப்பண்ணுவார் ஆபகூக் 3:18,19. எது இல்லாமற்போனாலும், எது நடக்காமல் போனாலும் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன் பூமியில் ஒன்றும் நடக்காதது போல தோன்றலாம், பரலோகத்தில் எல்லாம் நடந்து கொண்டு, நிறைவேறிக் கொண்டுதான் இருக்கிறது. தொடர்ந்து தேவனுடைய நாமத்தை, சுவிசேஷத்தை தேவன் விரும்புகிறபடி செய்துமுடிக்க, சுவிசேஷத்தைப் பரவச் செய்ய எவ்வளவு வேகமாய் நாம் அறிவிக்க முடியுமோ, அவ்வளவு தீவிரமாய் நாம் அறிவிக்க தேவன் நம்மைப் பயன்படுத்த ஜெபியுங்கள். தேவகிருபையால் இப்பொழுது கொரோனா சூழ்நிலைகள் குறைந்திருக்கிறபடியால் ஆங்காங்கே சுவிசேஷ கூட்டங்கள் நடைபெற்று வருகிறது. கடந்த மார்ச் 5,6,7 தேதிகளில் கோவை மாவட்டம் காந்திபுரத்தில் உள்ள சி எஸ் ஐ கிரைட்ஸ் சர்ச்சில் மூன்றுநாள் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. மூன்றுநாள் கூட்டங்களும் மிகுந்த ஆசீர்வாதமாக நடைபெற தேவன் கிருபை செய்தார். அதைத் தொடர்ந்து 2-வது சனிக்கிழமை நடைபெற்ற உபவாச ஜெபமும், மார்ச் 19-ஆம் தேதி நடைபெற்ற சிறப்பு உபவாச ஜெபமும் மிகவும் ஆசீர்வாதமாக, மகிமையாக நடைபெற்றது. கர்த்தர் தம்முடைய தாசனை மகிமையாய் பயன்படுத்தினார். தொடர்ந்து யூடுபில் நமது நிகழ்ச்சிகள் கர்த்தாவே என்னை கைதூக்கி விடும், இயேசுவை தினம் பார்ப்போம் என்ற நிகழ்ச்சியும், சனிக்கிழமைதோறும் ஒளிபரப்பாகும் சுவிசேஷ ஒளி என்ற நிகழ்ச்சியின் நேரம் மாற்றம் செய்யப்பட்டு இரவு 9.30 மணிக்கு ஒளிபரப்பாகிறது. இந்த நிகழ்ச்சிகளுக்காக ஊக்கமாக ஜெபியுங்கள். கர்த்தருடைய கிருபையினால் மாதஇதழும் ஆசீர்வாதமாக வெளிவர தேவன் கிருபை செய்திருக்கிறார். தொடர்ந்து ஊழியத்திற்கு ஏற்ற உதவியாளர்கள் கிடைக்கவும், ஊழியத்தின் தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.



தேவனுக்குச் சித்தமானால் இனிவரும் நாட்களில் அடிக்கடி சுவிசேஷ பயிற்சிகள் நடத்தி, சுவிசேஷ வேலைக்கு ஆட்களை உருவாக்கி, கிராமங்களைச் சந்திக்க இருக்கிறோம். தொடர்ந்து உங்கள் ஜெபத்தாலும். உதாரத்துவமான காணிக்கையினாலும் இந்த ஊழியங்களைத் தாங்கி, ஆதரிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இயேசு கிறிஸ்துவின் மாறாத கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக.

அன்புடன் உங்கள் சகோதரர்

L. Vincentraj

(சகோ. L.வின்சென்ட்ராஜ்)



# என் மீட்பர் உயிரோடிருக்கிறார்

(சகோ. L. வின்சென்ட்ராஜ்)

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த செய்தியின் மூலமாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். கிறிஸ்தவர்களுடைய பெரிய நம்பிக்கை, விசுவாசம், பொக்கிஷம் ஆண்டவராகிய இயேசு உயிர்த்தெழுந்தது தான். அவர் நித்தியமானவர், தலைமுறை தலைமுறையாக வாழ்கிறவர், ஜீவிக்கிறவர், உயிரோடிருக்கிறவர். அவருக்கு துவக்கமும் இல்லை, முடிவும் இல்லை. உபா 32:40 நான் என் கரத்தை வானத்திற்கு நேராக உயர்த்தி, நான் என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவர் என்கிறேன். அப்படி ஜீவித்திருக்கிறவர், என்றென்றைக்கும் வாழ்கிறவர் ஏன் மரிக்க வேண்டும்? ஏன் சாக வேண்டும்? தான் படைத்த, சிருஷ்டித்த மனிதன் பாவத்தின் சம்பளமாகிய மரணத்தைப் பெற்றபடியால், பிசாசினால் வஞ்சிக்கப்பட்டு, ஏமாற்றப்பட்டபடியால் அதன் தண்டனையான இறப்பை, மரணத்தை அடைந்தான். ஆதி 2:17-ல் ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம், அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார். தேவன் அவர்களுக்கு கொடுத்த நியமத்தை, கட்டளையை அவர்கள் மீறி நடந்ததினாலே பாவத்தின் சம்பளமாகிய மரணத்தை பெற்றுக் கொண்டார்கள். அதிலிருந்து நித்திய வாழ்வை இழந்து, என்றென்றைக்கும் ஜீவிக்கிற வாழ்வை இழந்து, தன் வாழ்க்கைக்கு தானே முடிவு கட்டிக்கொண்டார்கள். அவர்கள் தேவ கட்டளையை மீறினபடியால், நியமத்தை மீறினபடியால் மரணம் அவர்களை ஆண்டு கொண்டது. அவர்கள் சாத்தானைப் போல் தேவனுக்கு விரோதமாக, எதிராக செயல்பட்டபடியால் தேவனுடைய கோபமும், தேவநீதியும் அவர்கள் மேல் வந்தது. ஆகவே தான் ஆண்டவராகிய தேவன் அவர்களைப் பார்த்து சொன்னார் நீ என்னோடு வாழ, நித்திய நித்தியமாய் ஜீவிக்க, என்னோடிருக்க, என் மகத்துவத்தை அணிந்து அனுபவிக்கவும், என்னோடு உலாவவும் உன்னை ஏற்படுத்தினேன். நீயோ, உனக்கு என்று ஒரு வழியை ஏற்படுத்திக் கொண்டாய் என்றார். ஆகவே தான் ஆதி 3:23-ல் நீ எந்த மண்ணிலிருந்து எடுக்கப்பட்டாயோ அதே, மண்ணை பண்படுத்த, பயன்படுத்த பூமிக்கே திரும்பிப் போ. இனி இந்த பூமியிலே நீ அதிக நாள் உயிரோடிருப்பதில்லை. அதற்கு ஒரு எல்லையையும், காலத்தையும் வைக்கிறேன். உன் ஆத்துமா என் தொடர்பை இழந்தபடியால் அது மரித்துப் போய்விட்டது. ஒரு மரித்த ஆத்துமா என் சமூகத்தில் பிழைக்கவோ, வாழவோ முடியாது. உங்கள் ஆத்துமாவை நான் ஆரோசிக்கிறேன், அருவருக்கிறேன். என் வீடு ஜெபவீடு, நான் தங்கும் வீடு (இருதயம்) என்று எதிர்பார்த்தேன், நீங்களோ அதை கள்ளர் குகையாக்கிவிட்டீர்கள். இனி இந்த வாழ்வளிக்கும் தோட்டத்தில், என் சமூகத்தில் இருக்க முடியாது, பூமிக்கே திரும்பிப் போ என்று ஆதி 3:24-ல் அவர் மனுஷனைத் துரத்திவிட்டு ஜீவவிருட்சத்துக்குப் போகும் வழியைக் காவல்செய்ய, ஏதேன் தோட்டத்துக்குக் கிழக்கே கேருபீன்களையும், வீசிக்கொண்டிருக்கிற சுடரொளி பட்டயத்தையும் வைத்தார். அதன் பிறகு மனிதனுக்கு தேவனுடைய நினைவோ, பரலோக வாசனையோ, தேவனுடைய தொடுதலோ வரவில்லை. அவன் உணர்வற்றவனாக,

இருளடைந்தவனாக, தேவனை அறிந்திருந்தும், பார்த்திருந்தும் அவரை ஸ்தோத்தரியாமலும், மகிமைப்படுத்தாமலும் இருந்து உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்துவிட்டது. இதுதான் முதலாம் மரணம். சரீரத்தில் உயிரோடிருந்தார்கள் ஆனால் தங்கள் ஆத்துமாவில் மரித்துப் போய்விட்டார்கள். மரித்தவர்களும், மவுனத்தில் இறங்குகிற அனைவரும் கர்த்தரைத் துதியார்கள். உயிருள்ள நாமோ, அதுமுதல் என்றென்றைக்கும் கர்த்தரை ஸ்தோத்தரிப்போம் அல்லேலூயா சங் 115:17,18 அப்படிச் சொல்லுகிறது. இப்படிப்பட்ட ஒரு மனிதனுக்காக தன் ஜீவனைக் கொடுக்கவும், உயிரைக் கொடுக்கவும், அவனைத் திரும்பவும் வாழ வைக்கவும், தேவ சமூகத்தில் வந்து சேர்க்கவும், பிழைக்கவும் தேவன் ஒரு திட்டத்தை வைத்தார். அதுதான் மனிதன் மறுபடியும் ஜீவன் பெற வேண்டும், தேவனோடு ஒப்புரவாக வேண்டும். மறுபடியும் அவர் சமூகத்தில் பிழைக்க வேண்டும், வாழ வேண்டும் என்று. அடுத்து அவனுக்கு ஒரு வழியைக் காட்டுவதற்கு யோவான் 3:16-ல் தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப் போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். உலகை ஆக்கினைக்குள்ளாக தீர்க்கும்படி அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்-படும்படியே வந்தார். அதனால் பிதாவின் மடியில் இருந்த அவரின் ஒரேபேறான மகனாகிய இயேசு நான் இந்த பூமிக்கு இறங்கிப் போகிறேன், காணாமல் போனதைத் தேடவும், இரட்சிக்கவும் இந்த பூமிக்கு போகிறேன் என்றார். யோவான் 10:10-ல் திருடன் திருடவும் கொல்லவும், அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன். நானே வழி, நானே சத்தியம், நானே ஜீவன் என்றார். மரணத்திலிருந்தும், பாதாளத்தின் வல்லடிக்கும் தப்புவிக்கிறவர் நானே என்றார். சங் 89:48-ல் மரணத்தைக் காணாமல் உயிரோடிருப்பவன் யார்? தன் ஆத்துமாவைப் பாதாள வல்லடிக்கு விலக்கி விடுகிறவன் யார்? என்று மரித்த அநேகர் கதறிக் கொண்டிருந்தார்கள். நாங்கள் எப்பொழுது ஜீவவிருட்சத்தைப் பார்ப்போம், எங்களை மறுபடியும் இந்த ஏதேன் தோட்டத்திலே தேவனோடு இணைப்பவர் யார்? என்று கதறிக் கொண்டிருந்தார்கள். சங் 49:7,8,9-ல் ஒருவனாவது, தன் சகோதரன் அழிவைக் காணாமல் இனி என்றைக்கும் உயிரோடிருக்கும்படி, எவ்விதத்தினாலாவது அவனை மீட்டுக்கொள்ளவும், அவனிமித்தம் மீட்கும் பொருளை தேவனுக்குக் கொடுக்கவுங்கூடாதே. அவர்கள் ஆத்துமமீட்பு மிகவும் அருமையாயிருக்கிறது. அந்த ஆத்தும மீட்பைக் கொடுக்க, பாதாள வல்லடிக்கு, நரகத்திற்கு தப்ப, நாம் நித்தியஜீவனை பெற்று மறுபடியும் நித்திய பிதாவோடு இணைய இயேசு இந்த பூமிக்கு இறங்கி வந்து, ஒரு பெரிய ஆத்தும மீட்பை உண்டுபண்ணினார். அது தான் அவரது மனித அவதாரம், மனிதனாக பூமிக்கு இறங்கி வந்தார். பிலிப்பியர் 2:6,7-ல் அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். எபிரே 2:14,15-ல் ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க அவரும், அவர்களைப் போல மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவரானார். மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கு ஜீவகாலமெல்லாம் பயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும்படிக்கும் அப்படியானார். அதனால் தான் பூமிக்கு இறங்கி வந்து நானோ, என் ஆடுகள் ஜீவனைப்பெறவும், அது பரிபூரணப்படவும், தேவனோடு இணைக்கப்படவும் மரணத்தை ருசி பார்த்தார் எபிரே 2:18 அப்படிச் சொல்லுகிறது. மாற் 10:45-ல் அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல் ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்று சொல்லப்பட்டுள்ளது. அதனால் தான் அவர் பூமிக்கு வரவும், மரிக்கவும் வேண்டியதாயிருந்தது. இதுதான் ஆத்தும மீட்பு, இதுதான் பாதாள வல்லடிக்கு விலக்கி காப்பது. இதைச் செய்யத்தான் அவர் பரலோகத்திலிருந்து பூமிக்கு இறங்கினார். தேவகுமாரனாய் இருந்தவர் மனுஷகுமாரனாக மறினார். நானோ என் ஆடுகளுக்காக ஜீவனைக் கொடுக்கவும், அது பரிபூரணப்படவும் இறங்கி வந்தேன் என்றார். அவர் மனிதனுடைய தண்டனையை ஏற்றுக்கொண்டு மரணத்தை ருசிபார்த்தார். மரணமே உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே? என்றார்.



இந்த மீட்பின் திட்டத்தை நிறைவேற்றத்தான் அவர் பூமிக்கு வந்தார், ஜீவனைக் கொடுத்தார். காணாமற்போனதைத் தேடவும், மீட்கவும் வந்தேன் என்றார். இன்றைக்கு யாரெல்லாம் இதை விளங்கிக் கொண்டு, அறிந்து கொண்டு தேவனுக்குத் தன் வாழ்வை அர்ப்பணிக்கிறார்களே அவர்கள் பரலோக குடும்பமாக மாற முடியும். தேவனோடு இணைக்கப்பட, அவரோடு வாழ, நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள வழி உண்டாக்கி வைத்திருக்கிறார். இன்றைக்கு இந்த வழியை, தேவனுடைய உன்னத திட்டத்தை கண்டுபிடித்து அவருடைய வழியில் நடக்கிறவன் பாக்கியவான். போகட்டும் இயேசு மரித்த பின் என்ன நடந்தது? எப்படி அவர் உயிரோடு எழுந்தார் என்பதைப் பார்ப்போம்.

**மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன்.**


பிள்ளைகள் மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவர்களானபடியால் இவரும், மாம்சத்தோடும், இரத்தத்தோடும் இறங்கி வந்து மரணத்தை ருசி பார்த்தார். இந்த உலகத்தில் மனிதனுடைய வாழ்க்கைக்கு முடிவு மரணம் தான். மரணம் கொடிதானது நம்மில் யாரும் மரணத்தை அவ்வளவு எளிதாக விரும்பு வதில்லை, அதை கடந்து போகவும், அதை சந்தித்து ஏற்றுக் கொள்ளவும் தான் பயப்படுவோம். ஆனால் இயேசுவே பூமியில் வாழ்ந்த போது மனுஷகுமாரன் பாடுபடவும், மூப்பராலும், பிரதான ஆசாரியராலும், வேதபாரகராலும் பலபாடுகள் பட்டு, கொலையுண்டு, மூன்றாம் நாளில் எழுந்திருக்க வேண்டும் என்பதைத் தம்முடைய சீஷர்களுக்கு அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தார் மத் 16:21 அப்படிச் சொல்லுகிறது. தான் போவது நல்லது என்று அந்த நாளை எதிர்பார்த்து அதை சந்திக்க ஆவலோடு காத்திருந்தார். தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவோ, தான் மற்றவர்களுடைய கையில் இருந்து தப்புவிக்கப்படவோ அவர் விரும்பவில்லை. 1 கொரி 15:55-ல் மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே? என்றார். மரணத்தை வரவேற்று சவால் விட்டார். 1 பேதுரு 3:18-ல் ஏனெனில், கிறிஸ்துவும் நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக, நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒரு தரம் பாடுபட்டார்.அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார். அவர் மாம்சத்தில் கொலை செய்யப்பட்டார். அப்படியே அவர் கல்லறையில் இருந்து விடவில்லை, மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தார். எப்படி? அவர் தேவனுடைய வல்லமையினால், ஆவியினால் உயிர்ப்பிக்கப்பட்டார். மரணம் அவரை ஆண்டு கொள்ளவோ, அவரை கட்டியோ வைத்திருக்க முடியவில்லை. பாதாளத்தின் வாசல்கள், பாதாளத்தின் வல்லமைகள் ஆட்டம் கண்டு அசைய தொடங்கியது. மரித்த அநேகர், தேவனுக்காய் ஜீவித்த அநேகர் அவரோடே கூட எழுந்திருக்க ஆரம்பித்தார்கள். ஒரு குறிப்பிட்ட பட்டணத்தில் ஒரு தேவ ஊழியருடைய மகள் பிரசவ நேரத்தில் மரித்துப் போனாள். எல்லாரும் அந்த மருத்துவமனையில் கூடி அழுது கொண்டிருந்தார்கள். அந்த பிரேதம் சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்தது. ஆனால் அந்த போதகரோ சோர்ந்து போகாமல் அந்த துக்கத்திலும் தன் நண்பர்களைச் சேர்த்துக் கொண்டு சத்தமாய் பாட்டுபாடி தேவனை நோக்கி ஜெபிக்க ஆரம்பித்தார். ஏறக்குறைய அரைமணி நேரம் கடந்திருக்கும் அந்த மரித்த மகளுடைய சரீரம் அசைய ஆரம்பித்தது. மறுபடியும் செயல்பட ஆரம்பித்தது. இயேசுவே, இயேசுவே என்று அவள் கூச்சலிட்டாள். மரித்த அவள் உயிரோடு எழுந்து இன்றைக்கும் ஜீவிக்கிறாள். ஆண்டவருக்காக வாழ்ந்து கொண்டிருக்கிறாள். இப்படி தன் காலத்துக்கு முன்னே தேவனுடைய சித்தமில்லாமல் மரிக்கிற ஒவ்வொருவரையும் உயிர்ப்பிக்க, உயிரோடு எழுப்பத்தான் இயேசு சொன்னார் மரித்தேன், ஆனாலும், சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன் என்றார். யோவான் 5:21-ல் பிதாவானவர் மரித்தோரை எழுப்பி உயிர்ப்பிக்கிறது போல, குமாரனும் தமக்கு சித்தமானவர்களை உயிர்ப்பிக்கிறார். இன்றைக்கும் அவருக்குச் சித்தமானவர்களை உயிரோடு எழுப்பிக்கொண்டு தான் இருக்கிறார். எகிப்து தேசத்திலே ஒரு இஸ்லாமிய பெண் வேதத்தை வாசித்து இயேசுவை ஏற்றுக்கொண்டதினிமித்தம் கணவன் அவளைக் கொலை செய்து பிள்ளைகளோடு கல்லறையில் புதைத்து விட்டான். ஏறக்குறைய பல நாட்களுக்குப் பிறகு அவளும், அவளுடைய பிள்ளைகளும் உயிரோடு எழும்பி விட்டார்கள். இதெல்லாம் நடப்பதற்கு காரணம் என்ன? ஒரே ஒருவருடைய உயிர்த்தெழுதலினால் உண்டானது தான். ஒரே மனிதனால் மரணம் வந்தது போல, ஒரே ஒருவராலே உயிர்த்தெழுதலும் வந்தது. முந்தின ஆதாமால் மரணம் வந்தது. பிந்தின ஆதாமோ உயிர்ப்பிக்கிற ஆதாமாக உயிர்த்தெழுந்தவராக செயல்பட்டார். 1 கொரி 15:45 அப்படிச் சொல்லுகிறது. இன்றைக்கு அநேகர் பாவத்திலும், அக்கிரமத்திலும் மரித்துக் கிடக்கிற, செத்த பிரேதங்களாகவும், மற்றொரு பக்கம் போராட்டத்திலும், பிரச்சனையிலும் பல காரியங்களிலும் சிக்கி நடைபிணமாக வாழ்ந்து

கொண்டிருக்கிறதைப் பார்க்கிறோம். இப்படிப்பட்ட ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு உயிர்மூச்சைக் கொண்டுவரவும், உயிர்த்தெழுதலைக் கொண்டுவரவும் இயேசு உயிரோடு எழுந்தார். மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன் என்றார். இன்றைக்கு கல்லறை போன்ற வாழ்க்கையிலும், செயல்படாத வாழ்க்கையிலும் இருக்கிறவர்களை உயிரோடு எழுப்புவதற்குத் தான் ஆண்டவராகிய இயேசு உயிரோடு எழுந்தார்.

## அவர் உயிரோடிருக்கிறார்

நமக்காக மரித்து அடக்கம் பண்ணப்பட்டு உயிரோடு எழுந்த தேவன் இன்றைக்கு உயிரோடு இருக்கிறார். யார் யார் எல்லாம் இந்த உயிர்த்தெழுதலை நம்பி அவருக்கு முன்பாக தம்மைத் தாழ்த்தி, தேவனே, உம்மை நம்புகிறேன் என் உள்ளத்தில் வாரும், எனக்குள் வாசம்பண்ணும், என்னை வழிநடத்தும் என்றால் அந்த உயிர்த்தெழுந்த தேவன் நமக்குள் வந்து வாசம்பண்ணுவார். லூக்கா 20:38 சொல்லுகிறது அவர் மரித்தோரின் தேவனாயிராமல், ஜீவனுள்ளோரின் தேவனாயிருக்கிறார். எல்லாரும் அவருக்குப் பிழைத்திருக்கிறார்களே என்றார். அவர் மரித்தவருக்கு தேவன் அல்ல ஜீவனுள்ளோருக்கு தேவன் என்று சொல்லப்பட்டுள்ளது. இன்றைக்கும் அவர் உயிரோடிருக்கிறார். இதைத்தான் யோபு பக்தன் சொன்னார் என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றார். இன்றைக்கும் நாம் உயிரோடிருந்து லூக்கா 1:71-ல் சொல்லப்பட்டுள்ளபடி உங்கள் சத்துருக்களின் கைகளினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, உயிரோடிருக்கும் நாளெல்லாம் பயமில்லாமல் எனக்கு முன்பாகப் பரிசுத்தத்தோடும், நீதியோடும் எனக்கு ஊழியஞ்செய்ய கட்டளையிடுவேன் என்றார். இன்றைக்கு நாம் உயிரோடிருந்து, அந்த உயிரோடிருக்கிற ஆண்டவராகிய தேவனுக்கு ஊழியம் செய்து, அவர் வாழ்கிறார், ஜீவிக்கிறார் என்று செத்துமடிந்து கொண்டிருக்கிற ஜனங்களுக்கு, பலவிதமான போராட்டங்களில் வாழ்கிற ஜனங்களுக்கு இயேசு வாழ்கிறார், உயிரோடிருக்கிறார் என்பதை அறிவித்து, நிரூபித்து, அவருக்கு மகிமையாக, ஒரு சந்ததியை எழுப்ப வேண்டும். யோபு வாழ்க்கையில் ஒரு புது வாழ்வு தொடங்கினது போல தேவனைப் பின்பற்றுகிறவர்களுடைய வாழ்க்கையில் ஒரு புதுவாழ்வு தொடங்கவும், புதிய காரியங்களைப் பெற்றுக் கொள்ளவும் வழி நடத்த வேண்டும். ஆண்டவராகிய தேவன் தாமே ஜீவனுள்ள தேவனாய் இருந்து உங்களை மகிமையால் நிரப்பி நடத்துவாராக. ஆமென்.

> “பலவிதமான போராட்டங்களில் வாழ்கிற ஜனங்களுக்கு இயேசு வாழ்கிறார், உயிரோடிருக்கிறார் என்பதை அறிவித்து, நிரூபித்து, அவருக்கு மகிமையாக, ஒரு சந்ததியை எழுப்ப வேண்டும்”



# கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்



சகோதரி. கலா வின்சென்ட்ராஜ்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் சகோதரிகளுக்கு வாழ்த்துக்கள். தேவனுடைமய பெரிதான கிருபையினால் இந்த செய்தியின் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள். ஆவியிலே அனலாயிருங்கள். கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள் ரோமர் 12:11 என்று பவுல் சொல்லுகிறார். ஆண்டவர் இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவரும் நம்மை இரட்சித்து, நமக்காய் சிலுவையில் இரத்தம் சிந்தி மரித்து மூன்றாம் நாள் உயிரோடு எழுந்த ஆண்டவருக்காக ஏதாவது செய்யணும். இந்த வசனத்தை ஏதோ ஊழியம் செய்கிற ஊழியக்காரர்களுக்கு மட்டும் பவுல் எழுதவில்லை. இதை வாசிக்கிற அத்தனை பேரும் கர்த்தருக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்று சொல்கிறார். பழைய ஏற்பாட்டின் நாட்களில் ஆசாரியர்கள், லேவியர்கள், ராஜாக்கள், தீர்க்கதரிசிகள் ஆண்டவருடைய வேலையைப், பணிவிடையை, ஊழியத்தை செய்தார்கள். புதிய ஏற்பாட்டில் சிலரை அப்போஸ்தலர்களாக, மேய்ப்பர்களாக, தீர்க்கதரிசிகளாக, போதகர்களாக, சுவிசேஷகர்களாக ஆண்டவர் ஏற்படுத்தினார். அவர்கள் எப்படியெல்லாம் ஊழியம் செய்தார்கள். நாம் என்னவெல்லாம் செய்யவேண்டும் என்று பார்ப்போம்.

## தேவனுக்கும், ஜனத்துக்கும் ஊழியம்

யோசியா ராஜா எருசலேமிலே பஸ்காவை ஆசரிக்கிறபோது 2 நாளா 35:3-ல் லேவியரை நோக்கி பரிசுத்த பெட்டியை சாலமோன் கட்டிய ஆலயத்தில் வையுங்கள். உங்கள் தேவனாகிய கர்த்தருக்கும், அவருடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கும் ஊழியம் செய்யுங்கள் என்று சொல்கிறதை வாசிக்கிறோம். அப் 13:36-ல் தாவீது ராஜா தன் காலத்திலே தேவனுடைய சித்தத்தின்படி அவருக்கு ஊழியஞ்செய்த பின்பு மரித்தான். தானும் கர்த்தரை துதித்தான், துதிக்கிறவர்களை எழும்பப்பண்ணினான், யுத்தம் செய்தான், ஆலயம் கட்ட தேவையான பொருட்களை சவதரித்து வைத்தான் என்று வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது. அப் 6:4-ல் நாங்களோ ஜெபம்பண்ணுவதிலும், தேவ வசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம் என்றார்கள். ஜனங்களுக்கு மனம்திரும்புதல், பாவமன்னிப்பு, சரீரசுகம், விடுதலை இவைகளைப் பிரசங்கிக்க வேண்டும் என்பதே தேவனுடைய விருப்பம் இதை நாம் செய்ய வேண்டும். லூக்கா 24:47-ல் அன்றியும், மனந்திரும்புதலும், பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது என்று இயேசு தம் சீஷரிடம் சொன்னார். கொலோ 1:28-ல் எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம்பண்ணி தேவனுக்கு நாம் ஊழியம் செய்யணும் என்று பவுல் சொல்கிறதை நாம் பார்க்கிறோம். அன்று ஜனங்கள் தம் பாவபாரத்திற்காக பலியைக் கொண்டு வந்து செலுத்தினது போல இன்று அவர்களுக்காக நாம் பரிந்துபேசி விடுதலை, சுகம்பெற ஜெபித்து உதவணும் இது நாம் ஜனங்களுக்கு செய்யும் ஊழியம். அப் 6:2,3-ஆம் வசனத்தில் பந்தி விசாரணைக்காக பரிசுத்த ஆவியும், ஞானமும் நிறைந்த, நற்சாட்சி பெற்றிருக்கிற சிலரை தெரிந்தெடுத்தார்கள் பந்திவிசாரிப்பு செய்வது, சமையல் செய்வது இதுவும் ஊழியம் தான்.

இயேசுவுக்கு பெண்களும் ஊழியம் செய்தார்கள் என்று மத் 27:55-ல் மேலும், இயேசுவுக்கு ஊழியஞ்செய்யும்படி கலிலேயாவிலிருந்து அவரோடே வந்திருந்த அநேக ஸ்திரிகள் அங்கே தூரத்திலே நின்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். அநேகம் பெண்கள் உதாரணமாக மரியாள், மார்த்தாள் இயேசு பெத்தானியாவுக்கு வரும்போதெல்லாம் வீட்டில் ஏற்றுக்கொண்டு உணவு சமைத்து உதவியாய் ஊழியம் செய்தார்கள். லூக்கா 8:3-ல் ஏரோதின் காரியக்காரனான கூசாவின் மனைவியாகிய யோவன்னாளும், சூசன்னாளும் தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ்செய்து கொண்டுவந்த அநேகம் ஸ்திரிகளும் அவருடனே இருந்தார்கள். தாவீதும் அவனோடிருந்தவர்களும் பசியாய் இருந்த போது பெரிய விருந்து பண்ணின நாபால் வீட்டிற்கு ஆள் அனுப்பும் போது அபிகாயில் 1 சாமு 25:18-ல் இருநூறு அப்பங்களையும், இரண்டு துருத்தி திராட்சரசத்தையும், சமையல் பண்ணப்பட்ட ஐந்து ஆடுகளையும், ஐந்துபடி வறுத்த பயற்றையும், வற்றலாக்கப்பட்ட நூறு திராட்சக்குலைகளையும், இருநூறு அத்திப்பழ அடைகளையும் கழுதைகள் மேல் ஏற்றிக்கொண்டு போனாள் இதுவும் ஊழியம் தான். 1 நாளா 29-ஆம் அதிகாரத்தில் தாவீதும், ஜனங்களும் மனஉற்சாகமாய் கர்த்தருக்கு கொடுத்து ஊழியம் செய்தார்கள். கொடுப்பதும் ஒரு ஊழியம். செருபாபேல் ஆலயத்தைக் கட்டினான். நெகேமியா அலங்கத்தைக் கட்டினான். இரண்டுமே தேவனுடைய வேலை தான். சபைக்கு, கூட்டங்களுக்கு புதிதாக ஆட்களை அழைத்து வருவதும் ஊழியம் தான். ஏதாவது நாம் தேவனுக்கும் மனிதருக்கும் செய்யவேண்டும்.

## பரிசுத்தவான்களுக்கு ஊழியம்

பவுல் 1 கொரி 16:15-ல் சகோதரரே, ஸ்தேவானுடைய வீட்டார் அகாயா நாட்டிலே முதற்பலனானவர் களென்றும், பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்யும்படிக்குத் தங்களை ஒப்புவித்திருக்கிறார்கள் என்கிறார். 1 ராஜா 19:21-ல் எலிசா இரட்டிப்பான வரம் பெற்று ஊழியம் செய்வதற்கு முன்பு அவன் எலியாவுக்குப்பின் சென்று அவனுக்கு ஊழியம் செய்தான்.மோசே சீனாய் மலையில் இருக்கும்போது (யாத் 33:11-ல்) அவனுக்கு பணிவிடைக்காரனாய் நூனின் குமாரனாகிய யோசுவா என்னும் வாலிபன் ஆசரிப்புக் கூடாரத்தை விட்டுப் பிரியாதிருந்தான்.

தீமோத்தேயுவைப் பற்றி எழுதும் போது பவுல் பிலி 2:22-ல் தகப்பனுக்குப் பிள்ளை ஊழியம் செய்வது போல, அவன் என்னுடனே கூட சுவிசேஷத்தினிமித்தம் ஊழியஞ்செய்தானென்று அவனுடைய உத்தம குணத்தை அறிந்திருக்கிறீர்கள் என்று பவுல் சொல்கிறார். எபி 6:10-ல் உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ்செய்ததினாலும், செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்து விடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே என்பது போல நாம் பரிசுத்தவான்களுக்கு உறுதுணையாய் நிற்கும் போது அதுவும் கனமான ஊழியம்.

## உதவிக்கார ஊழியம்

பவுல் அப்போஸ்தலன் 1 தீமோத் 3:11,12,13-ல் அந்தப்படியே ஸ்திரிகளும் நல்லொழுக்கமுள்ளவர்களும், அவதூறு பண்ணாதவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், எல்லாவற்றிலேயும் உண்மையுள்ளவர்களுமாயிருக்க வேண்டும். மேலும், உதவிக்காரரானவர்கள் ஒரே மனைவியையுடைய புருஷருமாய், தங்கள் பிள்ளைகளையும் சொந்தக் குடும்பங்களையும் நன்றாய் நடத்துகிறவர்களுமாயிருக்க வேண்டும். 13-ஆம் வசனத்தின்படி இப்படி உதவிக்காரருடைய ஊழியத்தை நன்றாய்ச் செய்கிறவர்கள் தங்களுக்கு நல்ல நிலையையும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தில் மிகுந்த தைரியத்தையும் அடைவார்கள் என்று சொல்கிறதைப் பார்க்கிறோம். கலா 5:13-ன்படி அன்பினால் குடும்பத்தில் கூட ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து ஊழியம் செய்யலாம். கணவன், மனைவி, பெற்றோர், பிள்ளைகள், மாமியார், மருமகள், சகோதர, சகோதரி உறவுகளுக்குள் ஒருவருக்கு ஒருவர் உதவியாய் இருந்து மனுஷருக்கென்று செய்யாமல் தேவனுக்கென்று மனப்பூர்வமாய் செய்யலாம். எபே 6:6,8-ல் மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல் கிறிஸ்துவின் ஊழியக்காரராக



மனப்பூர்வமாய் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள். மனுஷருக்கென்று ஊழியஞ்செய்யாமல் கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியஞ்செய்யுங்கள். இயேசு என்ன செய்தார்?. மத் 20:26,27,28-ல் இயேசு உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால் அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனா யிருக்கக்கடவன், உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊரியக்காரனாயிருக்கக்கடவன். அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல் ஊழியஞ்செய்ய, அநேகரை, மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார். இயேசுவே ஊழியம் செய்ய வந்தாரென்றால் நாம் ஊழியம் செய்யணும். சீஷர்களை பந்தியில் அமர்த்தி அவர்களுடைய பாதங்களைக் கழுவினார். கர்த்தருக்கு ஊழியஞ்செய்ய வேண்டிய யாக்கோபு (ஓசி 12:12,13-ல்) சீரியா தேசத்துக்கு ஓடிப்போய், இஸ்ரவேல் ஒரு பெண்ணுக்காக ஊழியஞ்செய்து, ஒரு பெண்ணுக்காக ஆடு மேய்த்தான். கர்த்தர் ஒரு தீர்க்கதரிசியைக் கொண்டு இஸ்ரவேலை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார். ஆதி 31:6-ல் என்னால் இயன்றமட்டும் நான் உங்கள் தகப்பனுக்கு ஊழியஞ்செய்தேன் என்றான். இன்றைக்கு தேவன் உங்களை எகிப்திலிருந்து, உலகத்திற்காக வாழ்ந்து கொண்டிருக்கிற இடத்திலிருந்து புறப்படச் செய்வார். ரோமர் 6:6.-ன்படி நாம் இனிப் பாவத்துக்கு ஊழியம் செய்யாதபடி புறப்படுவோம். அதனால் தான் மத் 6:24-ல் இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது. ஒருவனைப் பகைத்து, மற்றவனைச் சிநேகிப்பான் அல்லது ஒருவனைப் பற்றிக் கொண்டு,மற்றவனை அசட்டைபண்ணுவான். தேவனுக்கும், உலகப்பொருளுக்கும் ஊழியஞ் செய்ய உங்களால் கூடாது என்றார்.

## கர்த்தருக்கு ஊழியம் செய்தால் என்ன செய்வார்.

நாம் ஆண்டவருக்கு ஊழியம் செய்யும்போது யோவான் 12:26-ன் பிற்பகுதியில் ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம் பண்ணுவார். நாம் கர்த்தருக்கு மனப்பூர்வமாய் ஊழியஞ்செய்யும் போது மனிதர்கள் நம்மைக் கனம்பண்ணுகிறார்களோ இல்லையோ ஆண்டவர் நம்மைக் கனம்பண்ணுவார். பிரச்சனை என்னவென்றால் நாம் ஆண்டவரின் கனத்தை விட மனிதர்களால் வரும் கனத்தையே அதிகம் விரும்புகிறோம். அது இல்லாத பட்சத்தில் சோர்ந்து போகிறோம். அது மட்டுமல்ல எரே 33:22-ல் நான் என் தாசனாகிய தாவீதின் சந்ததியையும், எனக்கு ஊழியஞ்செய்கிற லேவியரையும் வர்த்திக்கப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்கிறார். நாம் ஆண்டவருக்கு ஊழியஞ்செய்தால் நம்மை வர்த்திக்கச் செய்வார். நாம் தேவனுக்கென்று ஊழியம் செய்யாதபடி உலகத்துக்கும், மாமிசத்துக்கும், பணத்துக்கும், வயிற்றுக்கும் வேலை செய்தால் நாம் பாதிக்கப்பட்டு விடுவோம். எனவே நம்மைத் தாழ்த்தி இதுவரை எப்படி வாழ்ந்திருந்தாலும் இனி நம்மை, நம் வாழ்வை, நம் நோக்கத்தை சீர்ப்படுத்தி கர்த்தருக்கே ஊழியஞ்செய்ய அர்ப்பணிப்போம். லூக்கா 1:71-ல் உங்கள் சத்துருக்களின் கைகளினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, உயிரோடிருக்கும் நாளெல்லாம் பயமில்லாமல் எனக்கு முன்பாகப் பரிசுத்தத்தோடும் நீதியோடும் எனக்கு ஊரியஞ்செய்யக் கட்டளையிடுவேன் என்று ஆண்டவர் சொல்கிறார். எபி 9:14-ன்படி நித்திய ஆவியினாலே தம்மைத் தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியம் செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியை செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம். இயேசு கிறிஸ்துவின் இரத்தம், நித்திய ஆவியினாலே பழுதற்ற பலியாக நம் மனச்சாட்சியை செத்த கிரியைகள் அகல, நம்மை சுத்திகரிக்கிறது. நம்மை தேவனுக்கு ஊழியஞ்செய்ய தகுதிப்படுத்துகிறது. இயேசுவே என்னை மன்னியும், உம் இரத்தத்தால் என்னைக் கழுவும். உலகத்தின் பின்னே, உலகம் காட்டும் மாதிரிகளில் போய் விட்டேன் என்னை மன்னித்து சுத்திகரித்து ஏற்றுக்கொள்ளும் என்று சொல்வோம். தேவனுக்கும், ஜனங்களுக்கும், பரிசுத்தவான்களுக்கும், உதவிக்காரருடைய ஊழியத்திலும் நம் அன்றாடப் பணிகளிலும் மனுஷருக்கென்று செய்யாமல், தேவனுக்கே சகலத்தையும் செய்ய, ஆண்டவர் நமக்கு உதவி செய்யும்படி அர்ப்பணித்து ஜெபிப்போம். நாம் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு விதத்தில் ஆண்டவருக்கு ஊழியம் செய்ய ஆண்டவர் உதவி செய்வாராக. ஆமென்.



இயேசுவே ஊழியம் செய்ய வந்தாரென்றால் நாம் ஊழியம் செய்யணும். சீஷர்களை பந்தியில் அமர்த்தி அவர்களுடைய பாதங்களைக் கழுவினார்.

# ஆசீர்வாத உபவாச ஜெபம்

கடந்த மார்ச் 19, நாளில் விசேஷித்த குடும்ப ஆசீர்வாத உபவாச கூட்டம் நமது வானத்தின் எழுப்புதல் மையம் , செம்பட்டியில் ஆசீர்வாதமாக நடைப்பெற்றது , இந்த கூட்டத்தில் திரளான ஜனங்கள் கலந்துகொள்ள தேவன் கிருபை செய்தார் இக்கூட்டத்தில் **தீர்க்கதரிசி. வின்சென்ட் செல்வகுமார்** அவர்கள் தேவசெய்தியை அளித்தார் அவர்கள் அளித்த தேவ செய்தியில் ஒரு மனிதன் **சுவிசேஷம் அறிவிப்பது எப்படி ? சுவிசேஷம் என்றால் என்ன? மற்றும் கடைசி கால சுவிசேஷத்தை பற்றியும் தெளிவாக, ஆவியானவர் பேசினார்**, ஆவியானவர் பலமாக இடைப்பட்டார் இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அநேக மக்கள் நாங்களும் சுவிசேஷம் அறிவிப்போம் என்று தங்களை அர்ப்பணித்து, தேவ ஆசீர்வாதம் பெற்று கடந்துசென்றனர் தேவனுக்கே மகிமை உண்டாவதாக .


தீர்க்கதரிசி. வின்சென்ட் செல்வகுமார்


சகோ.ட.வின்சென்ட்ராஜ்


பாஸ்டர். ராஜசேகர்


பாஸ்டர். ஜான் K


சகோதரி. கலா வின்சென்ட்ராஜ்









## வாசகர்கள் கவனத்திற்கு !

வாசகர்கள் வசிப்பதற்கு எளிதாக நமது இயேசுவை தினம் பார்க்கிறேன் மாத இதழ் கலரில் அச்சஅடிக்கப்பட்டு வெளிவர தேவன் கிருபைசெய்தார். உங்கள் சந்தாவை இனி G-PAY மூலம் செலுத்தலாம் மற்றும் இந்த ஆண்டிற்கான உங்கள் சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள். G Pay +91 944 3009 333

# உயிர்த்தெழுந்த உன்னதர் இயேசு உன்னருகே தான் இருக்கிறார்...



சகோதரி.பிரேமா டேவிட்

கிறிஸ்துவில் அன்பான வாலிபத்தம்பி தங்கைகளே, மரித்து உயிர்த்தெழுந்து இன்றும் உயிரோடு நம் அருகே இருக்கின்ற நம் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

"தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், கர்த்தர் சமீபமாயிருக்கிறார்" சங்கீதம் 145:18

## தடைகளை நீக்க உன்னருகே இருக்கிறார்

அந்தக் கல் மிகவும் பெரிதான கல்லாயிருந்தது. மேலும் அந்த கல்லுக்கு முத்திரை போட்டு (சீல் வைத்து) யூதர்கள் கல்லறைக்கு காவல் வைத்து பத்திரப்படுத்தியிருந்தார்கள் (மத்.27:64-66) தான் உயிரோடிருந்த போது மட்டுமல்ல தான் மரித்தபின்பும் தன்னை பார்க்கும்படி, இருட்டுக்குப் பயப்படாமல் ஆர்வத்தோடும், துணிவோடும் வந்த அந்த பெண்களுக்கு கர்த்தர் தம்முடைய தூதனை அனுப்பி அந்தக் கல்லை புரட்டித் தள்ளினார். அந்த நேரத்தில் பூமி அதிர்ந்தது, காவலாளர் செத்தவர்களைப் போல் விழுந்தார்கள். இயேசு மரித்து விட்டார் அவ்வளவு தான் என்று இயேசுவை விட்டுவிடாமல் அவர் மரித்திருந்தால் என்ன அவரே எங்கள் இரட்சகர் அவர் எங்களுக்கு வேண்டும் என்று தேடின பெண்களுக்காக ஆண்டவர் பூமியை அதிரப்பண்ணி, தடுத்த கல்லைப் புரட்டி போட்டாரென்றால், உயிர்த்தெழுந்து இன்றும் உயிரோடு உங்களருகே இருக்கின்ற ஆண்டவர் உங்களுக்காக எத்தனை அற்புதங்களை செய்வார். தடைகள் விலகும் இயற்கைக்கு அப்பாற்பட்டதும், நீங்கள் நினைத்ததற்கும் மேலான காரியங்கள் உங்கள் வாழ்வில் நடக்கும்! அரசாங்கமோ, மனிதர்களோ, சாத்தானோ உங்களுடைய ஆசீர்வாதத்தை தடுக்க முடியாதுஇயேசு உயிர்த்தெழாதிருந்தால் உங்கள் நம்பிக்கை வீணாக வாய்ப்பு இருக்கிறது. ஆனால் இயேசு மரித்ததோடு அவருடைய சரித்திரம் முடிந்து போக வில்லை. அவர் மரித்தேன் ஆனாலும் இதோ சதா காலங்களிலும் உயிரோடு இருக்கிறேன் (வெளி 1:18) என்று அவர் உயிரோடு எழும்பினது தான், நமது நம்பிக்கைக்கு தொடக்கப்புள்ளி. அவரை நம்புகிற,, தேடுகிற, கூப்பிடுகிற உங்கள் வாழ்க்கையில் உள்ள தடைகளை நீக்க, உங்கள் வாஞ்சைகளை நிறைவேற்ற உங்கள் அருகிலேயே நிற்கிறார்.

## கண்ணீரைத் துடைக்க உன்னருகே இருக்கிறார்

தேவ தூதர்கள் அவளை நோக்கி. ஸ்திரியே, ஏன் அழுகிறாய் என்றார்கள். அதற்கு அவள்: என் ஆண்டவரை எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள். அவரை வைத்த இடம் எனக்கு தெரியவில்லை. இவைகளைச் சொல்லிப் பின்னாகத் திரும்பி, இயேசு நிற்கிறதைக் கண்டாள்; ஆனாலும் அவரை இயேசு என்று அறியாதிருந்தாள்.- யோவான் 20:13,14.

தன்னை வேதனைப்படுத்திய ஏழு பிசாசுகளை ஆண்டவர் இயேசு துரத்தி விடுதலையாக்கினதை நன்றியோடு நினைத்து ஆண்டவரைப் பின்பற்றியவள் மகதலேனா மரியாள் (லூக்கா 8:2). எல்லா பெண்களும், சீஷர்களும் இயேசு உயிர்த்தெழுந்த பின்பு காலியாக இருந்த கல்லறையைப் பார்த்த பின் இயேசு உயிர்த்துவிட்டார் என்று தூதர்கள் சொல்லியதை நம்பி சென்று விட்டனர். ஆனால் இந்த மகதலேனா மரியாள் மட்டும் இயேசுவை பார்க்காமல் இங்கிருந்து

போவதில்லை என்ற எண்ணத்தோடு அங்கேயே நின்று அழுது கொண்டிருந்தாள். தேவதூதர்கள், அவளை நோக்கி 'ஸ்திரீயே! ஏன் அழுகிறாய்' என்று கேட்டாலும் அவள் அழுகை ஓயவில்லை, அவள் கண்ணீர் நிற்கவில்லை. இயேசுவை! என் ஆண்டவரை! யாரோ எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள் அவரை எங்கு வைத்தார்களோ என்று ஆண்டவர் மேல் வைத்த அன்பினால் தேவனுக்கேற்ற துக்கமுடையவளாய் அழுது கொண்டிருந்ததை, அதற்குப் பின்னும் ஆண்டவரால் பொறுக்க முடியவில்லை. அவர் அவளருகே சென்று நின்றார்.அப்பொழுது இயேசு அவளைப் பார்த்து ஸ்திரீயே ஏன் அழுகிறாய், யாரைத் தேடுகிறாய் என்று கேட்டார். ஆனால் அவள் அவரை தோட்டக்காரன் என்று நினைத்து, ஐயா, நீர் அவரை எடுத்து எங்கேயாவது வைத்திருந்தால் எனக்குச் சொல்லும், நான் சென்று எடுத்துக் கொள்ளுவேன் என்றாள். இயேசு தாம் அவளருகே நிற்பதையும், தான் யார் என்று இன்னும் அவள் அறிந்து கொள்ளவில்லையே, என்று அறிந்து 'மரியாளே என்றார்' அப்பொழுது இது நான் கேட்டு கேட்டுப் பழகின என் ஆண்டவரின் சத்தமல்லவா? இவ்வளவு நேரம் அவர் என்னருகே நின்றிருக்கிறார் என்று பணிந்து கொண்ட போது, 'நான் உயிர்த்தெழுந்ததை சீஷர்களுக்குச் சொல்' என்று ஆண்டவர் அவளிடம் சொன்னார். இப்படியாக உயிர்த்தெழுந்த ஆண்டவர் தன்னோடே இருந்த சீஷர்களுக்கு அல்ல, தன்னை அதிகாலையிலும், ஆர்வமாய் பார்க்காமல் போகமாட்டேன் என்று நீதியின் மேல் பசிதாகத்தோடிருந்த, நன்றியோடு தன்னைப் பின்பற்றின மகதலேனா மரியாளுக்குத் தான்



முதன் முதல் தரிசனமானார் (மாற்கு 16:9) என் ஆசீர்வாதங்களை, நன்மைகளை, அதாவது என்னுடையவைகளை அல்ல, என்னை, நான் தான் வேண்டும் என்று என்னைத் தேடி வந்த மகதலேனா மரியாளே உனக்காக உன் கண்ணீரைத் துடைக்க உன்னருகே இருக்கிறேன் என்று உயிர்த்தெழுந்த அந்த காலையிலே பிதாவினிடம், பரலோகம் செல்லுமுன் மரியாளுக்கு தரிசனமானார். இதை வாசிக்கிற நீங்களும் மகதலேனா மரியாள் போல் ஆண்டவர் மேல் அன்பு வைத்து அவரைத் தேடுங்கள். முதலாவது, அவரைத் தேடுங்கள், அதிகாலையில் தேடுங்கள், நிச்சயம் அவரை கண்டடைவீர்கள் (நீதி.8:17). வேதத்தை தேடி வாசியுங்கள், அவர் சத்தம் கேட்டுப் பழகுங்கள். அவரும் உங்கள் விருப்பங்கள், எதிர்பார்ப்புகளை நிச்சயம் நிறைவேற்றுவார். அந்த பெண்களும் மகதலேனா மரியாளும், இருளின் நடுவிலும், காலியான கல்லறை, அரசாங்கம், மக்களின் எதிர்ப்பின் மத்திலும் ஆண்டவரைத் தேடின போது தடைகள் விலகினது, கண்ணீர் துடைக்கப்பட்டது, பயங்கள் நீங்கினது. உங்களுக்கும் உதவி செய்ய ஆண்டவர் ஆவலோடிருக்கிறார். எனவே எதைக் குறித்தும் கலங்கவும், பயப்படவும் வேண்டாம்.ஏனென்றால் நம் ஆண்டவர் உயிர்த்தெழுந்துவிட்டார். நீங்களும் வெற்றி பெறுவீர்கள். உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு தாமே தமது வல்லமையால் உங்கள் தடைகளை நீக்கி, கண்ணீரைத் துடைத்து, தம் ஆசீர்வாதங்களால் உங்களை நிரப்புவாராக.





# செய்வதை விரும்பி செய்

ஹலோ குட்டீஸ், நல்லாயிருக்கீங்களா!,

**L.K.G** படிக்கும் ஒரு பாப்பாவும், அவங்க அம்மாவும் கடைக்குப் போவதற்காக புறப்பட்டனர். அம்மா கதவைப்பூட்டிக் கொண்டிருக்கும்போது அந்தப் பாப்பா வீட்டு வாசலில் நின்று, எதையோ ரொம்ப கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்ததை அந்தப் பாப்பாவின் அம்மா கவனித்து விட்டார்கள். கதவைப்பூட்டிய பின் ரோட்டில் நடந்து கொண்டே அம்மா பாப்பாவிடம் கேட்டார்கள், என்ன பாப்பா, எதையோ கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தாயோ என்று கேட்டார்கள். அதற்கு பாப்பா, ஓ! அதுவா... நான் அந்த **Dogy** நாயைத் தான் பார்த்துக் கொண்டிருந்தேன். அந்த டாகிக்கு ஸ்கூலுக்குப் போகனும்னு கவலையில்லை, காலையில எந்திரிச்சு பல்லு விளக்கி, குளிச்சு, வீட்டுல வேலை செய்யணும்னு கவலையில்ல. நான் அந்த டாகி மாதிரி இருக்க முடியலையே ஸ்கூலுக்குப் போகவே புடிக்கலைம்மா என்றாள். மறுபடியும் அந்த பாப்பா அவள் அம்மாவிடம் அம்மா, நான் இன்னும் எத்தனை வருஷம் படிக்கனும் என்று கேட்டதற்கு ம்ம்.....ம் 18 வருஷம் படிக்கனும் என்று அவள் அம்மா பதிலளித்தார்கள். என்ன மா சொல்றீங்க? 18 வருஷமா! எப்படி என்னால் படிக்க முடியும் என்று மயங்கி விழாத குறையாக அந்த பாப்பா அழத்தொடங்கி விட்டாள். பாப்பா எதுக்கு இப்ப அழுகிற நீ அழுகாதே. படிப்ப நீ கசப்பா, பிடிக்காதது மாதிரி பார்கிறதாலத்தான் உனக்கு பிடிக்காம்மா, கஷ்டமா இருக்குது. உனக்கு லாலிபாப், சிக்கன்65 பிடிக்கும்ல அதுமாதிரி நெனச்சுப் பாரு நீ நல்லா படிச்சுருலாம் எல்லாமே உனக்கு **easy**-யாயிரும். என்ன சரியா என்று அம்மா ஒரு லாலி பாப்பை வாங்கிக் கொடுத்து மகளுடைய அழுகையை நிறுத்தினார்கள். என்ன குட்டீஸ் அந்த பாப்பா மாதிரி தானே நீங்களும் படிக்கனும், ஸ்கூலுக்குப் போகனும் ஏதாவது வேலை செய்யனும்னா வேண்டா வெறுப்பா, பிடிக்கலைனு சொல்றீங்க படிச்சாலும், வேலை செஞ்சாலும் நீங்க நல்லா படிக்கனும். நல்லா வேலையைச் செய்யனும்னு நினைச்சு விருப்பத்தோடு செஞ்சீங்கனா உங்களுக்கு எல்லாமே பிடிச்சுப்போயிரும். இயேசாப்பாகூட, நீ சாப்பிட்டாலும், குடிச்சாலும் இயேசப்பாவோடே மகிமைக்காக செய்யனும்னு சொல்லியிருக்காரு. இனிமே நீங்களும் எதையும் சந்தோஷமா, விருப்பமா செய்யுங்க. எதையும் கஷ்டமா நினைக்காதீங்க. என்ன சரியா?.

**ok bye.**

## ஜெபம்

அன்புள்ள இயேசப்பா, நான் படிச்சாலும், வேலை செஞ்சாலும் விரும்பி சந்தோஷமா செய்ய, படிக்க ஆர்வத்தையும், ஞானத்தையும், உடல் சுகத்தையும், சுறுசுறுப்பையும் தாங்க இயேசப்பா. இயேசுவின் நாமத்தில் பிதாவே. ஆமென்.

## மனப்பாட வசனம்

எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்.
1 கொரிந்தியர் 10:31






**Lets Spread the Light of end Time Gospel!**

**கடைசிகாலத்தில் சுவிசேஷம் எப்படி செய்வது? என்ன செய்வது?**

**சனிக்கிழமைதோறும் இரவு 9:30 மணிக்கு**

**YouTube -யில் காணத்தவறாதீர்கள்.**

# THANK YOU JESUS

# உன்னதர் இயேசுவுக்கு மகிமையை செலுத்துவோம்



**சகோதரி. சாந்தி திருப்பூர்.**

கடந்த நாட்களில் என் கணவருக்கு ஆப்ரேஷன் செய்ய வேண்டி இருந்தது. அவருக்கு இது மூன்றாவது ஆப்ரேஷன் நாங்கள் மிகவும் பயந்தோம். அவருடைய சரீர சுகத்திற்காகவும், என் மகனுக்காகவும் ஜெபிக்குமாறு தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஜெபிக்கக் கேட்டுக் கொண்டேன். சகோதரி அவர்கள் ஜெபித்தார்கள். தேவன் என் கணவருடைய வாழ்க்கையில் அற்புதம் செய்தார். மூன்றாவது ஆப்ரேஷனிலும் தேவன் அவரைக் காப்பாற்றினார், ஜீவன், சுகபெலன், ஆரோக்கியத்தைக் கட்டளையிட்டார். விரைவில் காயங்கள் ஆறவும், வேலைக்குச் செல்லவும் தேவன் கிருபை செய்தார். என் மகனும் அதிகமான காய்ச்சலினால் மிகவும் கஷ்டப்பட்டான். இப்போது அவனும் பரிபூரண சுகத்தைப் பெற்றான், தேவன் அவனுக்கும் மனமிரங்கி சுத்தைத் தந்தார். நானும் கடந்த நாட்களில் சரியாக ஜெபிக்க முடியாமல், தேவனைத் தேடுவதிலும், அவரை விசுவாசிப்பதிலும் தடுமாற்றத்துடன் இருந்தேன். தற்போது நன்றாக ஜெபிக்கவும், தேவனில் நிலைத்திருக்கவும், விசுவாசத்தோடு செயல்படவும் தேவன் எனக்கு அநுக்கிரகம் செய்தார். அவருக்கே எல்லா மகிமையும் உண்டாவதாக.

**சகோதரி. சகாயமேரி கோவை.**

என் மகன் ஆகாஸ் பின்மாற்ற வாழ்க்கைக்கு சென்று, தேவனுக்கு பிரியமில்லாதவனாய், மனம்போன போக்கில் வாழ்ந்து கொண்டிருந்தான். ஊழியத்திற்காக படித்தும், ஊழியம் செய்யாமல் செல்போனுக்கு அடிமையாகி, பெற்றோருக்கும் கீழ்படியாமல், தன் இஷ்டம் போல வாழ்ந்த அவனுக்காக ஜெபிக்குமாறு மிகுந்த மனவேதனையோடும், கண்ணீரோடும் பலமுறை தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஜெபிக்க கேட்டுக் கொண்டேன். சகோதரி அவர்களும் என் மகன் மனந்திரும்ப பாரத்தோடு ஜெபித்தார்கள், தேவன் ஜெபத்தைக் கேட்டு என் மகனின் மனதை மாற்றினார். எல்லா பாவ வழிகளையும் விட்டு விட்டு தேவனுக்குப் பிரியமாக வாழவும், மீண்டும் அவருடைய ஊழியத்தைச் செய்யவும் தேவன் கிருபை செய்தார். அவருக்கே கோடன கோடி நன்றி

**சகோதரி. பியூலா திண்டுக்கல்**

என் மகள் திருமண காரியம் நீண்ட நாட்களாகவே தடையாக இருந்து கோண்டே இருந்தது. நான் சகோதரியிடம் நேரில் சென்று மகள் திருமண காரியத்திலுள்ள எல்லாத் தடைகளையும் அகற்றி தேவன் காரியத்தை வாய்க்கச் செய்ய ஜெபிக்க கேட்டுக் கொண்டேன். தேவன் ஜெபத்தைக் கேட்டு என் மகளுக்கு காரியததை வாய்க்கச் செய்தார். திருமணம் கடந்த நவம்பர 8-ஆம் தேதி நடைபெற்றது. திருமணம் சென்னையில் வைத்து நடைபெற்றது. திருமணத்திற்கு முந்தின நாள் 7-ஆம் தேதி சென்னையில் இடி, மின்னலுடன் மழை பெய்தது. நாங்கள் இருந்த பகுதியோ பள்ளமான பகுதி, என்ன செய்வது என்று தெரியாமல் மிகவும் கலங்கி, கண்ணீரோடு நின்றோம். மழை நீர் தெருவில் வந்து வீட்டிற்குள் புகுந்தால் திருமணத்திற்கு வாங்கிய பொருட்கள் எல்லாம், மற்றும் திருமணத்திற்கு வந்திருக்கும் உறவினர்கள் நிலையை எண்ணி தேவனை நோக்கிக் கூப்பிட்டேன். தேவனே மனமிரங்கும் இந்த தெருவிற்குள் தண்ணீர் வரக்கூாது என்று சொல்லி கண்ணீரோடு ஜெபித்தேன். தேவன் கிருபையாக பக்கத்து தெருவிற்கு வரை வந்த தண்ணீர் நாங்கள் இருந்த தெருவிற்கு வராதபடிக்கு தேவன் தடுத்து நிறுத்தினார். அடுத்த நாள் திருமணம் எந்த குறையும் இல்லாமல், நல்லபடியாக நடந்து முடிந்தது. ஜெபத்தைக் கேட்ட தேவனுக்கு பல கோடி ஸ்தோத்திரங்கள்.

# ஊழியத்திற்கு ஆட்கள் தேவை

JOIN OUR TEAM

இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு
இணைந்து ஊழியம் செய்ய
அர்ப்பணமுள்ள உடன் ஊழியர்கள்
“அவசர தேவை”

- Data Entry Operators
- Prayer Warriors
- Video Editors
- Social Media Developers
- Office Administrator
- Keyboardist
- Stenographers
- Motion Graphics Designers
- Office Assistants
- Drivers
- Cook
- Magazine Designer’s

மதுரை, செம்பட்டி, சென்னை ஊழிய அலுவலகங்களில் ஊழிய வாஞ்சையுள்ளவர்கள் மட்டும் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கவும்

வாசகர்கள் கவனத்திற்கு!! கடைசி கால சுவிசேஷ பணியை மேற்கொள்வதற்கு உங்களுக்கு தெரிந்தவர்களை இப்பணிகளுக்கு பரிந்துரை செய்யுங்கள்
மேலும் அலுவலக விவரங்களுக்கு மட்டும் +91 7825 04 7825

## மீடியா மற்றும் ஐடி துறையின் சிறப்பு பயிற்சி வகுப்புகள் (3 மாதங்கள் மட்டும்)

Training Institute

**மீடியா துறையில்**

Camera, Editing, Program Production, Direction, Out door production ,Photoshop, Graphics, Motion Graphics மற்றும் மீடியா துறை சார்ந்த நுணுக்கங்கள் கற்று தரப்படும்

**ஐடி துறையில்**

Website Development. Website management, Android and iOS development etc.

**கல்வி தகுதி:**

ஏதேனும் பட்டப்படிப்பு (அல்லது) +2 (படைப்பாற்றல் மற்றும் ஆக்கத்திறன் உள்ளவர்களுக்கு)

(உணவு மற்றும் தங்குமிடம் வழங்கப்படும்) பயிற்சி முடித்தபின் சான்றிதல் வழங்கப்படும்

ஊழிய வாஞ்சையுடன், பயிற்சியில சிறந்துவிளங்குவோர்க்கு நமது சென்னை மற்றும் மதுரை அலுவலகத்தில் உடனடி வேலை வாய்ப்பு வழங்கப்படும்.



ஆன்லைன் விண்ணப்பத்தை சமர்ப்பிக்க
www.dprince.in/training

மேலும் விவரங்களுக்கு:
+91 7825 04 7825



# நடப்பு செய்திகள்

## அறிவியல் அதிசயம்: சூரியன் கருந்துளையாக மாறி பூமியை விழுங்கி விடுமா?சரி கருந்துளைகள் என்றால் என்ன?

ஒரு மரக்கட்டை எரியும் பொழுது வெப்பத்தையும், ஒளியையும் கொடுத்து, எரிந்து முடிந்த பிறகு கரித்துண்டுகளாக மாறுவது போல, நட்சத்திரங்கள் தன்னுள் எரிபொருள் இருக்கும்வரை அணுக்கரு இணைவு **(Nuclear Fusion)** செயல்முறையின் காரணமாக, வெப்பத்தையும், ஒளியையும், தொடர்ந்து கொடுத்து, எரிபொருள் முடிந்தபிறகு தன்னுடைய மொத்த தொகுதியும் சுருங்கி அடர்த்தி அதிகரித்து கருந்துளைகளாக மாறுகிறது. இந்நிலையில், கருந்துளைகள் அருகில் செல்லும் எந்த ஒன்றையும் அது இழுத்துக் கொள்ளும். ஒளியை கூட! ஒரு புதைகுழியில் காலை வைத்தால் என்னாகும்? அப்படியே நம்மை உள்ளே இழுத்துக்கொள்ளும்தானே. அதுபோலதான் கருந்துளைகளும். அதற்குக் காரணம், அபரிமிதமான ஈர்ப்பு விசை. அப்பொழுது சூரியனும் ஒரு நட்சத்திரம் தானே, அதுவும் ஒருநாள் கருந்துளையாக மாறி பூமியையும், மற்றக்கோள்களையும் உள்ளே இழுத்துக்குக்கொள்ளுமா என்றால், அதுதான் இல்லை. சூரியனின் நிறையைக் காட்டிலும் 1.44 மடங்கு **(Chandrasekhar Limit)** பெரிதாக உள்ள நட்சத்திரங்களே கருந்துளையாக மாறும் என்று தமிழ்நாட்டில் பிறந்த வானியல் இயற்பியலாளர் சுப்பிரமணிய சந்திரசேகர் நிரூபித்து, 1983ம் ஆண்டிற்கான இயற்பியல் நோபல் பரிசையும் பெற்றுள்ளார் கருந்துளைகள் இருப்பதற்கு ஆதாரம் என்ன? கடந்த 2015ம் ஆண்டு செப். 14ம் தேதி, பல்வேறு நாட்டு விஞ்ஞானிகளைக் கொண்ட 'லைகோ' **(LIGO)** ஆய்வகக் குழுவினர் (அந்தக் குழுவில் இந்தியாவைச் சேர்ந்த 37 விஞ்ஞானிகளும் அடங்குவர்) ஒரு புதிய வகையான அலையை கண்டுபிடித்தனர். இதனை ஐன்ஸ்டீனின் பொதுச்-சார்பியல் கொள்கையுடன் ஒப்பிடுகையில் இந்த அலை வினாடிக்கு 3 லட்சம் கிலோமீட்டர் பயணம் செய்து பூமிக்கு வந்த ஈர்ப்பு அலைகள் என தெரிய வந்தது மேலும் இது இரண்டு கருந்துளைகள் ஒன்றுடன் ஒன்று மோதிபிணையும்போது அவற்றில் இருந்து வெளியேறிய ஈர்ப்பு அலைகள் எனவும், அந்த இரண்டு கருந்துளைகள் 36 சூரிய நிறை மற்றும் 29 சூரிய நிறை கொண்டது எனவும் கணிக்கப்பட்டது. இந்த இரண்டு கருந்துளைகளும் பிணையும்போது 65 சூரிய நிறைக்கு பதிலாக 62 சூரிய நிறைதான் கொண்டிருந்தது. மீதம் உள்ள 3 சூரிய நிறைகள் ஈர்ப்பு அலைகளாக மாறி பூமியை நோக்கி பயணித்துள்ளதை கண்டறிந்தனர். அதாவது, இரண்டு கருந்துளைகள் அருகருகே வரும்போது குறிப்பிட்ட கோண உந்தத்தில் **(Angular Momentum)** ஒரு பொதுவான மையத்தை பொறுத்து பல ஆண்டுகள் சுற்றிவரும். அவற்றின் நிறை மற்றும் சுழலை பொறுத்து, அதன் சுற்றும் வேகம் கூடும் அல்லது குறையும். கருந்துளைகள் சுற்றும்போது, அவற்றின் நிறையானது ஆற்றலாக ($E=mc^2$ என்ற சமன்பாட்டின் வாயிலாக), அதாவது, ஈர்ப்பு அலைகளாக வெளியேறும். ஈர்ப்பு அலைகள் வெளியேற வெளியேற, கருந்துளைகளின் சுற்றுப்பாதை **(Orbit)** அளவும் குறைந்து கொண்டே வரும். ஒரு கட்டத்தில், இரண்டு கருந்துளைகளும் ஒன்றோடொன்று மோதலுற்று ஒரே கருந்துளையாக பிணைந்து கொள்ளும். அத்தருணத்தில் மிக அதிகளவில் ஈர்ப்பு அலைகள் வெளியேறும். ஐன்ஸ்டீனின் சமன்பாடுகள் கணித்த கருந்துளைகளும் ஈர்ப்பு அலைகளும் 100 ஆண்டுகளுக்கு பிறகு பரிசோதனையின் மூலம் நிரூபிக்கப்பட்டது.

Owned & Published by: Bro.L.VincentRaj , & Editor Bro.L.VincentRaj
Published by Jesus Lives Trust, Yesuvai Thinam Parkiren
54,A.I.B.E.A-Nagar,Paravai,Madurai - 625402
Printed by: C.CHELLACHAMY,PRISM PRINTERS,Madurai



# இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு இணைந்து சுவிசேஷ ஒளியை பரவ செய்யுங்கள்

தேவன், தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார்.அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகை சுவிசேஷமயமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார்(1கொரிந்தியர்3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபடவேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

## 1) BANK TRANSFER

A/C NAME : JESUS LIVES TRUST
BRANCH : KOCHADAI MADURAI
BANK NAME : UNION BANK OF INDIA
A/C.NO : 493902010001022
IFSC CODE : UBIN0549398

A/C NAME : L.VINCENT RAJ
BRANCH : MADURAI
BANK NAME : AXIS BANK
A/C.NO : 109010100247030
IFSC CODE : UTIB0001765

## 2) இணையதளம்(WEBSITE)

WWW.JESUSLIVES.IN

ஸ்கேன் செய்யுங்கள்

## 3) காசோலை(CHEQUE)

JESUS LIVES TRUST OR L.VINCENT RAJ

## 4) GOOGLE PAY : GPAY(GOOGLE PAY)TO , 944 300 9333 ,7598359316

## 5) மணியார்டர்(E.M.O) : இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் 54 ஏ.ஐ.பி.இ.ஏ நகர், ஏ - காலனி பரவை ,மதுரை - 625 402

நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது GOOGLE PAY மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை 944 28 00 449 என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு WHATSAPP மூலமாகவோ, accounts@jesuslives.in மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

Date of Publication on 20th (Every Month)
RNI NO .TNTAM/2000/00621 Postal Registration No. TN/MA/42/2021-2023
WPP Registration No. TN/WPP-40/SR/2021-2023
Date of Posting 27th (Every Month) Posted at Madurai R.M.S

# SUBSCRIBE OUR YOUTUBE CHANNEL

## JESUS LIVES MINISTRIES



EVG.KALAVINCENTRAJ

EVG.VINCENTRAJ

### வார நிகழ்ச்சிகள்

**கர்த்தாவே என்னை கைதூக்கிவிடும்**

MON - FRI @ 9:00 - 9:45 PM




**சுவிசேஷ ஒளி**

SATURDAY @ 9:30 PM




### அனுதின நிகழ்ச்சி

**இயேசுவை தினம் பார்ப்போம்**

DAILY @ 6AM




**SUBSCRIBE AND WATCH ON JESUS LIVES MINISTRIES**

TO

If Undelivered (Please Return To)
YESUVAI THINAM PARKIREN
54,A.I.B.E.A Nagar,Parvai
Madurai-625402
South India.